Regd. No. M. 4593.

தனிப்பிரதி விலை { உள்நாடு 0-1-0
பர்மா, மலேயா, 0-1-6 (6-காசு)

# குடி அரசு

Estd 1924.

பக்கங்கள் 8. சனி வெளியீடு. வருட சந்தா { உள்நாடு ரூ. 5-0-0
வெளிநாடு ரூ. 7-0-0

மாலை 20 } ஈரோடு 2-11-1946 ஐப்பசி 17உ { மலர் 4

## சில்லறைக் காசு

("காலி மணிபர்ஸ்")

கடவுளே துணை!

சிலர் கடுதாசி எழுதும்போது 'கடவுள் துணை' என்றுதான் எழுதுவது வழக்கம். "கடவுளே துணை" என்று ஏன் எழுதுவதில்லை தெரியுமா? கடுதாசி போய்ச் சேருவதற்கு ஸ்டாம்பு துணை, சரியான விலாசம் துணை, தபாற்காரரின் நாணயமும் துணை என்றாலும், கடவுளும் துணையாயிருக்கட்டுமே, என்பது அதன் பொருள்!

ஆனால் பெரியவர்கள்முதல் பெரியவர்களல்லாதவர்கள் வரையில், இப்போது "கடவுளே துணை" என்று கூற ஆரம்பித்திருக்கிறார்கள்!

"வங்காளத்தில் நான் எவ்வளவுநாள் தங்கியிருப்பேன் என்பது எனக்குத் தெரியாது. அடுத்தபடியாக நான் என்ன செய்யவேண்டும் என்பதைக் கடவுளே எனக்குச் சுட்டிக் காட்டவேண்டும்" என்கிறார், காந்தியார்.

இதுதான் நல்ல பேச்சு! அடுத்தபடி இவர் தப்பாக நடந்துகொண்டாலும் "கடவுள் தப்பு வழியில் அழைத்துப் போய்விட்டார்", என்று கூறித் தப்பித்துக் கொள்ளலாம்! ஒரு வேளை நல்ல காரியமாக ஏதேனும் நடந்துவிட்டாலும், "கடவுள் காந்தியாருக்கு எப்போதுமே துணையாக நிற்கிறார்; அதனால்தானே 'மகாத்மா' என்ற பட்டம் பெற்றார்," என்பார்கள், பாமரமக்கள், அதாவது பத்திரிகை படிப்பவர்கள்!

ஆனால் இவருக்குச் சுட்டிக் காட்டவேண்டிய கடவுள் "ஹிந்துக் கடவுளா, "முஸ்லிம் கடவுளா என்பதுதான் தெரிய வேண்டும்! ஏனெனில் வங்காளத்தில் "கடவுள் ஒருவர்" என்பதை நம்புகிறவர்கள் மிகக் குறைவாகவே இருப்பதாகத் தெரிகிறது. கடவுளும் கல்கத்தா காளிக்கு இரத்த அபிஷேகம் செய்து வேடிக்கைப் பார்க்கிறாரே தவிர, பிரிட்டிஷ் இராணுவத்தின் உதவியை நாடாமல், காந்தியாரின் அந்தராத்மா மூலமாக ஹிந்து—முஸ்லிம் ஒற்றுமையை உண்டாக்குவதாகக் காணோம்!

காந்தியார்தான் இப்படி கடவுள்மீது பாரத்தைப் போட்டுவிட்டார் எனக் கருதவேண்டியதில்லை. மந்திரி ராகவமேனன் திருச்செங்கோட்டில் பேசுகையில், "பஞ்சத்தினால் ஒருவரும் உயிர்விடக்கூடாது என்று கடவுளைப் பிரார்த்திக்கிறேன்," என்று கூறியிருக்கிறார்.

கவலையொழிந்தது மந்திரியாரே! 'பசி, பசி!' என்று இனிமேல் யாராவது கதறினால் நீர் சஞ்சலப்படவேண்டியதே இல்லை: "கடவுள் இருக்கிறார்! நீங்கள் சாகமாட்டீர்கள்!" என்று ஒரே வார்த்தையில் கூறிவிடலாம்! அப்படியே செத்தால்தான் என்ன மோசம்? "கடவுளே இவ்வாறு கட்டளையிட்டார்," என்று சொல்லிவிட்டால் போகிறது!

சரி, கடவுளே! நீர் இனிமேல் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். பெரியவர்கள் மட்டுமல்ல; சந்தேகப்படக்கூடிய ஆசாமிகள்கூட உங்கள் பெயரைத்தான் சொல்கிறார்கள்! "கடவுள் சாட்சியாக நான் திருடவில்லை" என்கிறான், மூர்மார்க்கெட்டில் முடிச்சவிழ்க்கும் முனிசாமி! ஆனால் நீர்மட்டும் மாஜிஸ்ட்ரேட்டுக்கு முன்பு வந்து ஒருநாளாவது சாட்சிக் கூண்டில் ஏறியிருப்பீரா? என்ன இரக்கமற்ற நெஞ்சு ஸார், உங்களுக்கு!

0 0

சாணி சாப்பிடுங்கள்!

இப்படி ஆபாசமாகக் கூறுகிறேனே என்று வாசகர்கள் கோபிக்கக்கூடாது! சரியாகச் சொல்ல வேண்டுமானால், சாணி, மூத்திரம் ஆகிய ஐந்தையும் சாப்பிடுங்கள், என்றுதானே கூறவேண்டும்! ஹிந்துமத பக்தர்கள் என்மீது ஆத்திரப்படு

வதானால், சமஸ்கிருதத்தில் சொல்லிவிடுகிறேன், "பஞ்ச கவ்யம் சாப்பிடுங்கள்!" ஆனால் நான் சொன்னால் கோபிப்பவர்கள் அய்யர் சொன்னதும் மட்டும் உடனே 'டபக்' என்று ஊற்றி விழுங்குகிறீர்களே! (பக்தர்களைத்தான் கேட்கிறேன்!)

கிழக்கு வங்காளத்தில் பலாத்காரமாக முஸ்லிம்களாக்கப்பட்ட "ஹிந்து"க்களை மீண்டும் ஹிந்துக்களாக்குவதற்கு மதத் தலைவர்கள் சில முறைகளைக் கூறியிருக்கின்றனர். அவைகளில் "பஞ்ச கவ்யம்" சாப்பிடுவதும் ஒன்று! அதைத்தான் சொன்னேனே தவிர, "பாலைக் கறந்து பார்ப்பான் வாயிலும் கல்லின் தலையிலும் ஊற்றிவிட்டு, நீங்கள் பசுஞ்சாணியையும் அதன் சிறுநீரையும் சாப்பிட்டுச் சந்தியில் நில்லுங்கள்" என்று சொல்வதற்கு நான் என்ன முட்டாளா? அல்லது அயோக்கியனா?

"கங்கா ஜலத்தைப் புரோக்ஷிப்பதும்" இன்னொரு முறையாகக் கூறப்படுகிறது! இவ்வளவு சுளுவாக "ஹிந்து"வாக மாறுவது நல்லதுதான்! சிவாஜியை க்ஷத்திரியனாக்குவதற்காகக் கேட்டதுபோல, லட்சக்கணக்கான ரூபாய், பார்ப்பனருக்குத் தட்சணையாகக் கொடுத்தால்தான் "ஹிந்துவாகலாம்" என்று சொல்லாமல், இவ்வளவு மலிவான முறையையாவது கூறினார்களே, புண்ணியவான்கள்! காலத்திற்குத் தகுந்தபடி முறையையும் மாற்றிக்கொள்ள வேண்டியதுதானே! சிம்லாவில் "ஸ்டாக்கிங்ஸ்", "பூட்ஸ்" சகிதமாகப் பார்ப்பனப் புரோகிதர் திதி செய்து வைக்கிறார்களே, அதைப்போல!

சரி, மீண்டும் ஹிந்துவான பிறகு, பார்ப்பானுக்கு அடிமையாகத்தானே இருக்கவேண்டும்? அதைச் சொல்லக் காணோமே!

"ஹிந்து"வாக இருந்து மதம் மாறியவர்கள் எல்லோரையுமே இந்தப் பஞ்ச கவ்யம், கங்கா ஜலம் — இரண்டையும் கொண்டே ஹிந்துக்களாக்கிவிட முடியுமா? என்பது ஒரு கேள்வி. "ஹிந்துக்கள்" என்றால் எந்த ஜாதியாராக ஆக்க முடியும்? என்பது மற்றொரு கேள்வி. உதாரணமாக, லார்ட் வேவல் ஹிந்துவாக விரும்பினால், அல்லது ஜனாப் ஆசப் அலி ஹிந்துவாக விரும்பினால், (நல்ல மனிதர்கள், பாவம்!) அய்யர்களாக மாற்றப்படுவார்களா? அல்லது அய்யங்கார்களாகவா? அல்லது ஆதித்திராவிடர்களாகவா? அய்யராக மாறவேண்டுமானால், ஒரு கைக்குப் பதிலாக, ஒரு செப்பு பஞ்சகவ்யம் சாப்பிட்டால் போதுமா?

தோழர்கள் அம்பேத்கார், சிவ ஷண்முகம், சிவராஜ் இவர்கள் தலையிலும் கங்கைத் தண்ணீரைத் தெளித்து, (வேண்டுமானால் கங்கையிலேயே முழுக்கி எடுத்தாலும் சரி,) அய்யர் அல்லது அய்யங்காராக்கி கோவில் சிலையைத் தொடுமாறு செய்ய முடியுமா? பார்ப்பனரோடு திருமண சம்பந்தம் வைத்துக்கொள்ளுமாறு செய்ய முடியுமா?

சங்கராச்சாரியார், சநாதன தர்மத் தலைவர்கள், பிராமணோத்தமர்கள்—ஆகியோர் என் கேள்விகளுக்குப் பதில் சொன்ன பிறகு, பஞ்சகவ்யமும் கங்கா ஜலமும் குடம் குடமாகத் தயார்செய்ய ஆயத்தமாயிருக்கிறேன்!


விரைவில் மலர்கிறது!

பெரியார் உருவம் தாங்கிய அழகிய அமைப்புள்ள

## காலண்டர்கள்

கலங்கா நெஞ்சமும், இரும்புள்ளமும் படைத்த நமது ஒப்பற்ற தலைவர் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் நம் இன்பத் திராவிட நாட்டின் மீது தன் கைக்கோலை ஊன்றிக்கொண்டு, வீரத் தோற்றத்துடன் தலைநிமிர்ந்து நிற்கும் உருவப்படம் அமைக்கப்பட்ட, காண்பார் மனதைக் கவரும்படியான காலண்டர்கள்!


ஒன்றின் விலை ரூ. 0-8-0.

வியாபாரிகட்குத் தக்க இலாபம் தரப்படும்.

விபரங்கட்கு:-

திராவிடன் பதிப்பகம்,
P. B. 18, வேலூர் (வ. ஆ)





ஜெயராம் காயசுத்தி லேகியத்தைச் சாப்பிடுங்கள்

தலைவலி, மயக்கம், வாந்தி, நெஞ்சுவலி, வயிற்றுவலி, புளித்தேப்பம், வயிற்றுப்பிசம், குடல்வாதம், இடுப்புவலி, மூலநோய், இவைகளைப்போக்கி மலத்தைச் சுகமாய்ப் பிரிக்கும்

அற்புத சஞ்சீவி

ஜெயராம் காயசுத்தி லேகியம்

1-சேர் ரூ. 4, ½-சேர் ரூ 2-2-0.

வி. பி. பி. வேறு.

ஜெயராம் வைத்தியசாலை,
28, காசிவிஸ்வநாதர் கீழ்வீதி, கும்பகோணம்.

ஸ்டாக்கிஸ்ட்:- P. G. ராஜன்,
ஜெனரல் மர்ச்சண்ட், நீடாமங்கலம்.


ரோஜா முத்தையா

25-10-'46 வெள்ளிக்கிழமையன்று அண்ணாமலைநகரில் போதுக்கூட்டம் நிகழ்ந்த ஞான்று ஈரோடு தந்த வள்ளல் பெரியார் ஈ. வெ. ரா. அவர்களுக்கு அளித்த

# வரவேற்புரை

★

இன்பத் திராவிடத்தின் இணையற்ற தலைவ!

உலகம் எத்தனையோ தலைவர்களுக்கு வரவேற்பு கூறியுள்ளது, வாழ்த்துரை நிகழ்த்தியுள்ளது. பெரியார்கள் பலரைப் பார்க்கும் வாய்ப்பும், அவர்களைப் பாடிப் பரவும் பேறும் பெற்றது. இது உலக வரலாற்றுச் சுவடியால், படம்பிடித்துக் காட்டப்படுகிறது.

ஆனால் அலை தாவும் கடல் சூழ்ந்த இஞ்ஞாலம் தங்களைப்போல ஒரு பெரியாரை இதுவரை பெறவில்லை. இது உண்மை, வெறும் புகழ்ச்சி யில்லை.

காமக் களியாட்டங்களை, மகேசுவரன் பெயர் கூறி, அவன் லீலைகள், திருவிளையாடல்கள் என்று கதைத்த கயவரின் கீழ்மதியைக் காய்ந்தார் பயகோரஸ். அது முற்றிலும் களைந்தெடுப்பதற்கு முன் மாண்டார்.

குயில் மொழியார், மயில் நடையார், மான் விழியார், கடைக்கண் வீச்சுக்குக் காணிக்கை, மத ஏடுகளை விற்று, செலுத்தி சிற்றின்ப விளையாடல்களில் மிதந்த காமக் கசடர்களைத் தாக்கினார் விக்ளிப்

மதபோதகரை வாதக்கிழுத்து, அவர்கள் வாய்களுக்குத் தன் ஆணித்தரமான கேள்விகளால் பூட்டை மாட்டினார் மார்ட்டின் லூதர்.

குருமார்களின் குறுமதியை, சிறுமை எண்ணங்களை, மதிகெட்ட செயல்களைக் கண்டித்தார் ஸ்விங்கிலி.

கடவுள் நாமஞ்சாற்றி கதியற்றவர்களை ஏமாற்றிடும் எத்தர்களைச்சாடினார் இங்கர்சால்

வைதீகச் சேற்றை, அதில் நெளியும் புழுக்களை, அதில் வீசும் நாசகால காற்றை வெளியாக்கினார் சாக்ரடீஸ்.

கண்டகண்ட கற்களைக்கடவுளெனும் அறியாமையை அகற்ற ஆயிரமாயிரம் கற்களால் அடிபட்டார் முகம்மதுநபி.

பூமி தட்டையல்ல என்று கூறியதால் உதையும், அடியும் பட்டார் கலீலியோ.

சனாதனத்திற்குச் சரியான அணுக்குண்டு வீசினார் வால்டேர்.

அடிமைகளை, அவர்கள் அழுந்திக்கிடந்த கீழ்நிலையிலிருந்து வெளியிலே விட்டு, விடுதலைக் காற்றை வேண்மட்டும் உட்கொள்ள வழி காட்டினார் ஆபிரகாம் இலிங்கன்.

மங்கிய மதியைத் துடைத்து ஒளிவிட தனது குருதியைத் துளிதுளியாகவிட்டு, சிலுவையிலேயே உயிர் விட்டார் ஏசுநாதர்.

சீனரின் மாபெரும் சமுதாயத்தின் திடீர்ச் சரிவைச் சரிசெய்தார் சன்யாட்சேன்.

பகுத்தறிவுத் தோழனானார் பர்னாட்ஷா.

அன்பு நெறிகாட்ட, அழகிய மனைவியையும், இளங்குழவியையும் நள்ளிரவில் விட்டுப் பிரிந்து சித்தார்த்தர் காடு மலை சென்று இறுதியில் புத்தரானார்.

கருணை வழியை உலகு கடைபிடிக்க ஆறாத்துயர்களுக்கு ஆளானார் மகாவீரர்.

வாழ்க்கையிலே படை படையாக உலவிடும் வாட்டத்தின் ஓட்டத்தை, ஆட்டத்தை வெட்ட வெளியாக்கினார் கோர்க்கி.

வறுமையின் கொடுமையை மக்கள் மனமெனும் திரையிலே அறிவெனும் இயந்திரமூலம் அனுபவம் எனும் படச்சுருளின் துணைகொண்டு படம் பிடித்தார் டாய்டாவ்ஸ்கி.

வாழ்வின் வேதனையை வெருட்டும் திட்டம் காட்டினார் டார்வின்.

வஞ்சகத்தின் வாழ்க்கைப் போக்கை வகை வகையாகப் பிரித்து, அணுவணுவாக விளக்கினார் சிங்களேர்.

மக்களுக்கு அரசியலில் அதிகப் பங்குத் தேவை என்றார் ரூசோ.

ஒடப்பர்களைத் தட்டி யெழுப்பி, பண மூட்டைகளின் கொடுமையைத் தாக்கினார் பேயின்.

உழையாது, குனியாது, வளையாது குந்திக் கிடக்கும் சரிந்த தொந்தியர்களின் கொடுமையைக் கூறினார் காரல் மார்க்ஸ்.

அதற்கென படைதிரட்டி, போராடி, வெற்றி கண்டார் லெனின்.

ஆம், இத்தனைப் பேர்களும் பெரியார்கள் தான். இவர்கள் அத்தனைப்பேரையும் சேர்த்து கரைத்து குழைத்து எடுக்கப்படும் சாறு தங்கள் உடலில் ஓடும் ஒரு துளி இரத்தம். அத்துளிகளாலான புரட்சிவடிவம் தாங்கள் என்று உணர்கிறோம், பெருமையடைகிறோம்.

அத்தகைய கிடைத்தற்கரிய பெரியாராகிய தங்களை வருக, வருக, வருக என்று மும்முறையும் கூறி முழு மனதுடன் வரவேற்கின்றோம்.

அ. நகர், 23-10-46 } இங்ஙனம், திராவிட மாணவ மத்தியக் கழகம்.

# குடி அரசு

1946-௵ நவம்பர்௴ 2௳

## ஆலயப் பிரவேசம்

### இப்போதுதான் புத்தி வந்தது.

ஈரோட்டில் "பஞ்சமர்களுக்கு"க் கோவில் பிரவேச அனுமதி தேவஸ்தான அதிகாரிகளால் சென்ற மாதம் 28ந் தேதி தரப்பட்டிருக்கிறதுடன் "பஞ்சமர்கள்" பிரசாதம் பரிமாற "சூத்திரர்கள்" வாங்கி சாப்பிட்டதாகவும் சொல்லப்படுகிறது.

இது பெரிதும் "மகிழ்ச்சி" அடையத்தக்க காரியமேயாகும் என்றாலும், ஈரோடு சிவன் கோவிலில் (ஆலயத்தில்) சூத்திரர்கள் செல்லும் அளவுதூரம் தான் பஞ்சமர்களும் செல்ல அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆதலால் 4வது வருணத்தாராகிய சூத்திரர்களும், 5-வது வருணத்தார் (பஞ்சமர்கள்) ஆகிய பறையர் சக்கிலியர் என்பவர்களும் ஒரே இனத்தவராக அதாவது திராவிட இனத்தவர்களாக இருப்பதால் திராவிட மக்கள் ("சூத்திரர்கள்") பெரும்பாலும் இதற்கு இணங்கி தங்களுக்கு உரிமை உள்ள அளவுக்குப் "பஞ்சமர்"களும் செல்லவும் அவர்கள் வழங்கும் ஆகாரம் வாங்கி உண்ணவும் ஒப்புக்கொண்டுவிட்டார்கள்.

முதல் வருணத்தார் என்பவர்களாகிய "பிராமணர்"கள் இந்தக் காரியத்திற்கு இதுவரை தங்கள் உரிமை என்பவைகளில் எதையும் விட்டுக்கொடுத்தவர்கள் அல்ல. அவர்கள் சுலபத்தில் விட்டுக்கொடுக்கப் போவதும் இல்லை. அதாவது சிலை (உருவம்) இருக்கும் இடத்திற்குச் செல்லவோ, உருவத்திற்குப் பணிவிடை, பூசை செய்யவோ, உருவத்திற்குச் சோறு உணவு முதலியவை பக்குவம் செய்யவோ, படைக்கவோ மற்றொரு மாபெரும் புரட்சி ஏற்பட்டு உருவங்களுக்கே ஆபத்துவரும் நிலைமை ஏற்படும் வரை அவர்கள் ("பிராமணர்கள்") மற்றவர்களுக்கு இடம் கொடுக்கப்போவதில்லை. இதை எதற்காக இந்தச் சமயத்தில் எடுத்துக் காட்டுகிறோம் என்றால் சூத்திரர்கள் என்பதும் பஞ்சமர்கள் என்பதும் பார்ப்பனர்கள் காரியத்தில், அனுபவத்தில் செய்து வரும், காட்டிவரும் பேதம் தானே ஒழிய சாஸ்திரத்திலோ சட்டத்திலோ சூத்திரன் என்பதைத்தவிர மற்றபடி அதற்குக் கீழ் வேறுஜாதி பஞ்சமர் என்பதாக எதுவும் வகுக்கப்பட்டிருக்கவில்லை. கடவுளின் முகம், தோள், இடுப்பு, கால் ஆகிய நான்கு இடங்களில் 4-ஜாதியார்தான் சிருஷ்டிக்கப்பட்டார்களே ஒழிய வேறு இடங்களில் வேறு யாரும் சிருஷ்டிக்கப்பட்டதாக ஆதாரம் இல்லை. பஞ்சமர்கள் என்பவர்களை அழைப்பதிலும், தென்னாட்டில் ஆதிதிராவிடர்கள் என்றும், வடநாட்டில் நாம சூத்திரர்கள் என்றும் தான் அழைக்கப்படுகிறார்களே தவிர மற்றபடி அந்த வகுப்புக்கு வேறு பேர் கிடையாது. வடமொழியிலும் அவர்ணஸ்தர்கள் என்று அழைக்கப்படுகிறார்களே தவிர அவர்களுக்கு ஒரு வருணமும் வகுக்கப்படவில்லை அவர்ணஸ்தர் என்றால் சூத்திரர்களிலும்கூட பல வகுப்பார் சேர்க்கப்படுகிறார்கள், சில இடங்களில், சில ஜட்ஜுமெண்டுகளில் சில பிராமணர்கள், க்ஷத்திரியர்கள், வைசியர்கள் என்பவர்கள்கூட சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

இப்படி இருக்க, பின்னர் ஏன் அந்தப்படி சூத்திரர்களுக்கும் கீழாகப் பஞ்சமர் என்று ஒரு பிரிவு ஏற்படுத்தப்பட்டது என்றால், சூத்திரர்களை ஏமாற்ற அதாவது சூத்திரர்கள் தாங்கள் ஏன் யாவருக்கும் கீழான ஜாதி என்கின்ற எண்ணம் ஏற்பட்டு எங்கு பார்ப்பனர்களுடன் கலகம் செய்துவிடுவார்களோ என்று கருதி அவர்களுக்கும் (சூத்திரர்களுக்கும்) கீழாக ஒரு ஜாதியை, வகுப்பை, பிரிவை ஏற்படுத்தி அவர்களைச் சூத்திரர்கள் தங்களைவிட கீழான ஜாதி ஒன்று இருப்பதால் அவர்களிடம் வேலைவாங்க அனுமதி இருப்பதால் தாங்கள் பார்ப்பனர்களுக்குக் கீழாக ஒரு கீழ்த்தர ஜாதியாய் இருப்பதில் குற்றமில்லை என்று கருதி பஞ்சமர்களை இழிவுபடுத்துவதிலேயே தங்கள் கவனம் செலுத்தும்படியாகவும் பார்ப்பனர்களிடம் தகராறுக்கு வராமல் இருக்கும்படியாகவும் செய்த சூழ்ச்சியேயாகும்.

ஆதலால்தான் இன்று பஞ்சமர்களுக்கு ஆலயப்பிரவேசம் ஏற்பட்டதில் பஞ்சமரும் சூத்திரரும் ஒன்று என்றுதான் ஆயிற்றே ஒழிய இதனால் பிராமணனுக்கு எவ்வித நட்டமும் அந்தஸ்துக் குறைவும் ஏற்பட்டுவிடவில்லை என்கின்றோம்.

இனி, சூத்திரரும், பஞ்சமரும் என்பவர்கள் செய்யவேண்டிய வேலை என்னவென்றால் சிலை இருக்குமிடத்தில் பார்ப்பனர் மாத்திரம் போகலாம் என்று இருக்கும் நிபந்தனையையும், அவன் (பார்ப்பனன்) மாத்திரம் சிலைக்குப் பூசை செய்யலாம் என்று இருக்கும் நிபந்தனையையும், சமஸ்கிருத மந்திரங்களால்தான் பூசை செய்யவேண்டும் என்று இருக்கும் நிபந்தனையையும், பார்ப்பான் மாத்திரம்தான் நிவேதன ஆகாரம் சமையல் செய்யு

வேண்டும் என்று இருக்கும் நிபந்தனையையும் எடுபடும்படி முயற்சி செய்யவேண்டும். இப்படிச் செய்தால்தான் சூத்திரர் நிலை சிறிதாவது உயர்ந்தது என்று சொல்லலாம். இதைக் காங்கரஸ்காரர்கள் ஒருவரும் செய்யமாட்டார்கள். வேறு யாராவது செய்து காங்கரஸ்காரர்களை நிர்ப்பந்தத்தில் கொண்டுவந்து வைத்துவிட்டால் அப்பொழுது ஜம்பமாக வந்து புகுந்துகொண்டு வெட்கமில்லாமல் தாங்கள்தான் செய்ததாகப் பெருமை பேசிக்கொள்ளுவார்கள்.

ஏனெனில் இந்தக் கோவில் பிரவேச முயற்சி இந்நாட்டில் முதல் முதலாக 20-வருடங்களுக்கு முன் சுயமரியாதை இயக்கத்தாரால் துவக்கப்பட்டது என்பது யாவரும் அறிந்ததாகும். அப்போது காங்கரஸ்காரர்கள் அவர்கள்மீது பழிபோட்டு பாமர மக்களையும் அவர்கள்மீது ஏவிவிட்டார்கள். சுயமரியாதை இயக்கத் தலைவர் பெரியார் ராமசாமி செல்லுமிடங்களில் எல்லாம் 144 உத்திரவு வழங்குவதும், கோவில்களில் போலீஸ் காவலும் அடி ஆள்கள், காலிகள் காவலும் வைப்பதும் பல ஊர்களுக்கு ரிசர்வு போலீஸ் அனுப்புவதுமாகக் கலவரம் செய்து வந்தார்கள். இதனாலேயே சுயமரியாதைக்காரர்கள் கோவிலில் இருப்பது கடவுள் அல்ல, கல், செம்பு, பித்தளைப் பொம்மைகள் என்றும் அதை வணங்குவது காட்டுமிராண்டிக் காலத்து மக்கள் தன்மை என்றும் பார்ப்பார ஜாதி வயிற்று வளர்ப்புக்கு ஏற்படுத்தப்பட்ட வெள்ளாமைதான் பார்ப்பான் பூசை செய்வது முதலிய சூழ்ச்சி என்றும் மற்றும் உருவக் கடவுளை வணங்குவது அறிவற்றத்தனம் என்றும் எவ்வளவோ புரட்சிக் கருத்துக்களைச் சொல்லிவந்தார்கள். அதன்பயனாய்ப் பெரியாருக்கு எவ்வளவோ எதிர்ப்பும் தொல்லையும் இருந்தது என்றாலும் இப்போது பெரும்பாலான திராவிட மக்கள் சிந்திக்க ஆரம்பித்துவிட்டார்கள்.

அன்றியும் கோவிலுக்குள் பஞ்சமர்களை அனுமதிக்க வேண்டும் என்பதாக 1930ம் ஆண்டுக்கு முன்பாகவே பெரியார் தேவஸ்தான கமிட்டித் தலைவராக இருந்தபோது தேவஸ்தான கமிட்டியில் தீர்மானம் நிறைவேற்றிவைத்தார். அப்போது அவரைத் தவிர கமிட்டியில் மற்ற அங்கத்தினர் எல்லோரும் வேளாளக் கவுண்டர் பிரபுக்களாகவும் வைதீகர்களாகவுமே இருந்தார்கள் என்றாலும் ஏகமனதாய் அத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பிறகு அடுத்தநாள் சுயமரியாதை இயக்கத் தோழர்களான குஞ்சிதம் குருசாமி, மாயவரம் நடராஜன், அ. பொன்னம்பலம், ஈஸ்வரன் முதலியவர்கள் பஞ்சம வகுப்பு பசுபதி, கருப்பன் முதலிய 3, 4-பேர்களை அழைத்துக்கொண்டு ஈரோடு சிவன் கோவிலுக்குள் பழம் தேங்காயுடன் பிரவேசித்து, சிலைக்குமுன் பூசை செய்ய ஆரம்பித்தார்கள்.

அப்போது அவர்களைச் கோவிலைச்சுற்றி உள்ள சில "சூத்திர" (திராவிட) மக்களும் பூசாரிப் "பிராமணர்" (பார்ப்பனர்)களும் கோயிலுக்குள் அவர்கள் இருக்கும்போதே பூட்டிவிட்டார்கள். 2, 3நாள் அவர்களுக்குச் சாப்பாடுகூட மதில் மீது ஏற்றி நாகம்மையாரால் அனுப்பப்பட்டது. பிறகு பெரியார் சென்னையில் இருந்து வந்ததும் கதவைத் திறக்கும்படிச் செய்து வெளியாக்கினார். உடனே போலீசார் கேசு எடுத்து, சுவாமி அசுத்தப்படுத்தப்பட்டதாக நடவடிக்கை நடத்தி, சிலரைத் தண்டித்தார்கள். திருவண்ணாமலையில், மாயவரத்தில், இரட்டை அணையில் மற்றும் சில இடங்களில் இதுபோலவே சுயமரியாதைக்காரர்கள் மீது கேசுகள் நடந்தன. இதே சுயமரியாதைக்காரர்கள்தான் திருவாங்கூர் ராஜ்யத்திலும் சுசீந்தரத்தில் கோவில் பிரவேச சத்தியாக்கிரகம் செய்தார்கள். இவற்றில் ஏற்பட்ட தண்டனையின் பயனாய்ச்சுயமரியாதைக்காரர்கள் திருவாங்கூரில் ஈழவர்களை இஸ்லாம் மதத்தில் சேர்க்கும் பிரச்சாரம் செய்து பலரை இஸ்லாத்தில் சேர்த்தார்கள். அந்தச் சமயத்தில் தமிழ்நாட்டிலும் 2000, 3000 பேர்கள் வரை இஸ்லாத்தில் சேர்ந்தார்கள். பல இடங்களில் குழப்பமும் கொலையும் ஏற்பட்டன. இதன் பயனாய்த் திருவாங்கூர் மகாராஜா அவர்கள் திருவாங்கூர் இராஜ்யம் பூராவிலும் கோவில், தெரு, குளம், சத்திரம் ஆகியவைகளை எல்லா பிரஜைகளுக்கும் திறந்து விட்டுவிட்டார். இப்போது இந்தப் பெருமை காந்தியாருக்குப்போய்விட்டது. தமிழ்நாட்டிலும் அப்போது முதல் இந்தக் கிளர்ச்சி சிறிது சிறிதாக வெற்றிபெற்று வருகிறது என்றாலும் பார்ப்பனர்கள் இனியும் முழுவதும் எல்லாக் கோயில்களும் திறந்துவிடவில்லை. காலம் கடத்தி வருகிறார்கள். 3000 கோவில்கள் உள்ள சென்னை மாகாணத்தில் இதுவரை அதாவது இந்த 20வருட கால சுயமரியாதை இயக்கப்பிரசாரத்தின் பயனாய் சுமார் 30 அல்லது 40 கோவில்களே பஞ்சமர்களை அனுமதித்திருக்கின்றன. அதுவும் பெரிதும் சூத்திரர்கள் அனுமதிக்கப்படும் அளவுக்குத்தான் என்றால் இனி பாக்கி உள்ள 2970 கோவில்களும் 3000, 4000 உருவங்கள் இருந்

## நன்றி நவிலல்

எனது சகோதரன் என். அர்ச்சுனன் 12-10-46ம் தேதி இறந்தது குறித்து, சென்னை, காஞ்சீபுரம், சண்முகபுரம், திருவத்திபுரம், புவனகிரி, தூத்துக்குடி, பறங்கிமலை, நாகை, விருதுநகர், தென்மதுரை, மதுரை, அழகாடி, தஞ்சை, கும்பகோணம், பேராவீரணி, திருச்சி, திண்டுக்கல், பட்டுக்கோட்டை, நாகர்கோவில், தேவமண்டலம், பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, ஆனைமலை, ராசிபுரம், செவ்வாய்ப்பேட்டை, சேலம், அம்மாபேட்டை, தர்மபுரி, கோயமுத்தூர், சூலூர், மணச்சநல்லூர், ஈரோடு முதலிய ஊர்களிலும் மற்றும் பல இடங்களிலும், அனுதாபக்கூட்டங்கள் கூட்டியும், இரங்கல் தீர்மானங்கள் நிறைவேற்றியும், எங்கள் குடும்பத்தாருக்கு அனுப்பிவைத்த, அனுதாபச் செய்திகளுக்கும், சுயமரியாதைச் சங்கங்களுக்கும், வாசகசாலைகளுக்கும், திராவிட வாலிப, மாணவ, கழகங்களுக்கும் மற்றுமுள்ள திராவிட இயக்க அன்பர்களுக்கும், பந்துக்களுக்கும், நண்பர்களுக்கும் எங்களது மனமார்ந்த நன்றியை இப்பத்திரிக்கையின் மூலம் தெரிவித்துக்கொள்கிறோம். தனிப்பட்ட முறையில் நன்றிகூற முடியாததற்கு வருந்துகின்றோம்.

என். நல்லசேனாதிபதி,
சர்க்கரை மன்றாடியார்,
பழையகோட்டை பட்டக்காரர்.

---

கும் இடங்களும், பூசை உரிமை, படைப்பு உரிமை, தமிழ் பிரார்த்தனை உரிமை ஆகியவை எந்தக்காலத்துக்கு வருவது என்பதும், இனியும் எத்தனை எலக்ஷன் காலத்துக்குக் காத்திருப்பது என்பதும் விளங்கவில்லை. இதுவும் இப்போது முனிசிபல் தேர்தல், ஸ்தலஸ்தாபன தேர்தல் இல்லாதிருந்திருக்குமானால் இவைகூட நடந்திருக்குமா என்பது சந்தேகம். அதிலும் இந்து முஸ்லிம் தகராறு வரும்போது "பஞ்சமர்"களையும் சேர்த்துக் கொள்ள இது ஒரு சூழ்ச்சி என்றும் சொல்லலாம்.

எப்படி இருந்தாலும் நாம் ("சூத்திரர்கள்') கட்டிய கோவிலில், நாம் அடித்தளவைத்த உருவத்துக்கு, நாம் கொடுக்கும் சாமான்களைக்கொண்டு, நமக்காகச்செய்யப்பட்டும் பூசைக்கு நமக்குக் கொடுக்கும் இந்த அற்ப உரிமை மேல்ஜாதியார் கருணை கூர்ந்து பிச்சை கொடுப்பதுபோல் இருக்கிறது. நம் இழிநிலைக்கு இந்தஉதாரணமே போதுமானதாகும்.

எப்படி இருந்தாலும் ஈரோடு கோவில் இப்போதாவது திறக்கப்பட்டது ஈரோட்டிற்குப் பெருமையாகும். இதற்காக முன்னிலையில் இருந்து பாடுபட்டு வெற்றிபெறவைத்த காங்கரஸ் தோழர்களுக்கும் இந்தச் சலுகையில் எலக்ஷனில் நிற்க ஆசைப்பட்ட தோழர்களுக்கும் மனமார்ந்த நன்றி செலுத்துகிறோம்.

---

(8ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு மனிதன் தனியாய் ஏங்கி நிற்பதைத் தெருவில் போகிற ஒருவன் பார்த்துவிட்டால் "என்ன உனக்கு ஏதாவது உதவிசெய்யும் பாக்கியம் எனக்குக் கிடைக்குமா?" என்று கேட்காமல் போகமாட்டான். எவ்வளவு அவசரமாய்த் தெருவில் போகிற ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும் ஒரு அன்னியன் ஏதாவது ஒரு விஷயம் கேட்டால், நின்று, பொறுமையாய் இருந்து பதில் சொல்லுவார்கள். இதை ஒரு பெருமையாயும் நினைப்பார்கள் ஏதாவது ஒரு தெருவோ இடமோ ஒருவனை ஒருவன் காட்டும்படிக் கேட்டால் கூடவே வந்து காட்டுவான்; அல்லது தன்னால் கூடிய அளவு அதற்கு உதவிசெய்துவிட்டு தெரிந்த மற்றவனிடம் ஒப்புவித்து அந்த வேலையைச் செய்யும்படிச் சொல்லிவிட்டுப் போவான்.

அவ்விடத்திய கிராம ஜனங்களின் வாழ்க்கைத் திட்டமானது இதைவிட தாராளமாக இருக்கிறது. தங்களுக்குத் தெரியாத விஷயத்தைப்பற்றி யாராவது கேட்டுவிட்டால் தெரிந்தவனைப் பிடித்து ஒப்புவித்துவிட்டுப் போவார்கள். தங்களுக்குச் சம்பந்தமில்லாத விஷயத்தில் தாங்களாகச் சிறிதும் கவலை செலுத்தமாட்டார்கள்; காதும் கொடுக்கமாட்டார்கள்.

### கீழ்நாட்டில் மக்களின் வாழ்க்கைத் திட்டம்

இந்நாட்டு மக்களுக்கு வாழ்க்கையில் எவ்விதத் திட்டமும் கிடையாது. அவ்வப்போது சம்பவிப்பதை அனுபவிக்கப் பழகி இருக்கிறார்களே ஒழிய அசௌகரியமோ அதிருப்தியோ, நாட்சண்யக் கஷ்டமோ நேராமல் இருக்கும்படி முயற்சி செய்வதே இல்லை. முன்பின் தகவல் கொடுக்காமல், எதிர்பாராத நிலையில் வந்து இறங்கி விடுவார்கள்; அகாலத்தில் வந்து கதவைத் தட்டுவார்கள்; சாப்பாட்டு வேளையில் வந்து சாப்பாட்டு விஷயத்துக்கு வீட்டுக்காரருக்கு நெருக்கடி ஏற்படுத்தி விடுவார்கள்; வீட்டுக்காரர் சாப்பிடப்போகும் போது வந்து உட்கார்ந்துகொண்டு பேசிக்கொண்டே இருப்பார்கள். தாங்கள் யாரிடம் போகவேண்டுமென்று நினைக்கிறார்களோ அவருடைய சௌகரியம் எப்படி இருக்கும்? அவர் வேறு வேலையில் ஈடுபட்டு இருப்பாரோ? என்பதைப் பற்றிக் கவனிக்காமல் அங்குபோய்ச் சங்கடத்தை உண்டுபண்ணுவார்கள்.

[தொடரும்]

---

## அறிவிப்பு

திருப்பூரில் 'குடி அரசு' கிடைக்குமிடம்:-

வ. இராசன்,
திராவிடர் கழகம், கச்சேரிவீதி.

---

## கவனிக்க!

'நங்கை' புத்தகத்தின் ஏஜண்டுகள், சந்தாதாரர்கள், விளம்பரக்காரர்கள், கட்டுரையாளர்கள் இனி நங்கைக்கான கடிதங்களையும் மற்றவற்றையும் கீழுள்ள முகவரிக்கு அனுப்பும்படிக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

சா. நரசிம்மன்,
மானேஜர், நங்கை செயலகம்,
அரக்கோணம்.

# மேல்நாடும் கீழ்நாடும்

## பெரியார் ஈ. வெ. ரா. சொற்பொழிவு

(சென்றவாரத் தொடர்ச்சி)

எனெனில், பிரிட்டிஷ் கவர்ன்மெண்டு இந்தியாவைவிட்டுப் போய்விட்டால், உள்நாட்டில் மத வகுப்புத் தொல்லைக்கும், வேறு ஒரு நாட்டான் இந்தியாவைக் கைப்பற்றாமல் இருக்க காப்பாற்றிக்கொள்ள முடியுமா என்பதற்கும் எந்த கட்சியும் பதில்சொல்ல முடிவதில்லை.

பிரிட்டிஷாரிடமிருந்து சில நிர்வாக அதிகாரங்களைத் தங்களுக்கு மாற்ற வேண்டும் என்று கேட்பதிலும்கூட எல்லா கட்சியும் ஒன்று சேருவதற்கில்லாமல், கொடுக்கும் அதிகாரம் ஒரு வகுப்புக்கு, மதத்திற்கு போய்விட்டால் மற்ற மத வகுப்புக்காரர்களுக்கு ஆபத்து ஏற்பட்டு விடுமே என்கின்ற பயத்தால் அதையும் யாரும் நியாயமாய்க் கேட்பதில்லை. தங்கள் தங்கள் வகுப்பு மதங்களுக்குச் சரியானபடி அதிகாரம் வேண்டுமென்று கேட்கிறார்கள். இதற்குச் சிறுபான்மையாக இருந்து அதிக பாகம் அனுபவிப்பவர்கள் முட்டுக்கட்டை போடுகிறார்கள்:

ஆதலால் பாமர மக்களை வசப்படுத்த மாத்திரம் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டை குற்றம் சொல்லிவிட்டு, காரியத்தில் தங்கள் தங்கள் வகுப்பு மதத்துக்கு ஆதிக்கம், உத்தியோகம் வரும்படியான நடப்பு முறைகளாலேயும் வேண்டுதல்களாலேயும் ஒருவர்க்கொருவர் போராட்ட முறைகளையே கொள்கைகளாகக் கொண்டிருக்கின்றனர். இதனாலேயே பெரிதும் இந்தியா எந்தத் துறையிலும் முன்னேற்றமில்லாலும், பொது இலட்சியம் இல்லாமலும் இருந்து வருகிறது.

இந்தச் சங்கங்களால் பிரிட்டிஷாரிடமிருந்து இதுவரை இந்த 50வருடமாகப்பெற்ற இலாபமோ சுதந்திரமோ சில வகுப்புக்காரர்கள் பெருத்த சம்பளமுள்ள பதவிகள் அனுபவிக்கிறதைத் தவிர, வேறு நன்மை கிடைத்திருப்பதாக சொல்லுவதற்கு இல்லை.

இன்றுள்ள மாகாண நிர்வாக நிலை 1910ம் வருஷத்துக்கு முன் எப்படி இருந்ததோ அந்த நிலைக்குப் போய்விட்டது. பொறுப்பும் செல்வாக்கும் உள்ள எந்த ஸ்தாபனமும் இன்று அதை மாற்றும்படி கேட்க முன்வர முடியாமல் இருக்கிறது.

இதன் காரணமெல்லாம் இந்திய அரசியல் கொள்கை என்பது, வகுப்பு மதவாத கொள்கை என்பதல்லாமல் வேறொன்றுமல்லாமல் இருப்பதேயாகும்.

### சமுதாயம்

#### மேல்நாட்டில் சமுதாயம்

மேல்நாட்டின் பொதுஜன சமுதாயநிலையை எடுத்துக்கொண்டால் அங்கு சமுதாயத்தில் பிறவி பேதமே இல்லை, யாவரும் சமமேயாகும். அங்கு பொது ஜனங்களை மதிப்பதில் பிறவி உயர்வு-தாழ்வு என்கின்ற உணர்ச்சியே கிடையாது. யாவருக்கும் எவ்வித சமுதாய உரிமையும் உண்டு. எவனுக்கும் பிறவி காரணமாக எவ்வித அசௌகரியமோ, இழிவோ ஒன்றும் கிடையாது. மனிதனை மனிதன் தீண்டக்கூடாது என்றும், கிட்ட வரக்கூடாது என்றும் கருதுகின்ற—சொல்லுகின்ற கொடுமை அங்கு இல்லை. கோவிலானாலும், உண்டிச்சாலையானாலும், வேறு எந்தப் பொதுஸ்தாபனமானாலும் எல்லோருக்கும் சம உரிமையே தவிர வித்தியாசம் பாராட்டுவதே கிடையாது. பிறவியின் காரணமாகக் கல்வியோ, அந்தஸ்தோ, புரோகிதம், பூசாரி, மதக்குருவோ ஏற்பட்டு ஒருவரை ஒருவர் சுரண்டும் வழக்கம் ஏற்பட்டிருக்கவில்லை. யாரும் எந்தக் கல்வியும் எந்த வேலையும் எந்தப் பதவியும் அடையலாம்.

இந்தக் காரணங்களால் அங்கு ஒரே சமுதாயமாகவும், மக்கள் யாவரும் சம உரிமையுடையவர்களாகவும் இருப்பதால் அந்த நாட்டாருக்குள் ஒற்றுமையும், கட்டுப்பாடும், பொது இலட்சியமும் வளர்ச்சிபெற்று அந்நாடு சமுதாயத்தால் முன்னேற்றமடைந்து பூரண சுயேச்சை சமூகமாக இருக்கிறது.

#### கீழ்நாட்டில் சமுதாயம்

இந்த நாட்டின் சமுதாயம் பிறவியின் பேரிலேயே வகுக்கப்பட்டிருக்கிறது. அதனால் இந்த நாட்டில் பல வகுப்பாக மக்கள் பிரிக்கப்பட்டு விட்டார்கள். யாலை மதிப்பதிலும் அவனுடைய பிறவியைப்பற்றிக் கருதுவதே இங்கு முதல் வேலையாக இருக்கிறது. சமுதாயத்தில் பிறவியைப் பார்த்து அந்தஸ்து கொடுக்கப்பட்டிருக்கிறது; பிறவி காரணமாக மனிதனுக்கு அநேக அசௌகரியங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. யோக்கியதையில் எப்படிப்பட்டவனாயிருந்தாலும் பிறவிகாரணமாக இழிவுபடுத்தப்படவும், உயர்த்தப்படவும் ஆகிவிடுகிறான்; வேறு எவ்வித காரணமும் இல்லாமலே மனிதன் பிறவியையும் ஜாதியையும் உத்தேசித்து தீண்டப்படாதவனாகவும், பார்க்கப்படாதவனாகவும் மதிக்கப்படுகிறான். ஒரு மனிதன் தொடுவதோ சாப்பிடுவதோ பாவமாகக் கருதப்படுகிறது: ஒரு மதத்தைச் சேர்ந்த கோவில், குளம், உண்டிச்சாலை ஆகியவற்றில் அவற்றை ஏற்படுத்தியவனுக்குக்கூட சம உரிமை இல்லை; இந்திய சமூகத்தில், கல்விகூட வகுப்புக்குத் தகுந்தபடி பிரிக்கப்பட்டு விட்டது. உத்தியோகம்கூடப் பெரிதும் இதை அனுசரித்தே பிரிந்துவிட்டது. ஒரு வகுப்புக்கு மேல் உத்தியோகம்; ஒரு வகுப்புக்குக் கீழ் உத்தியோகம். பொது இலட்சியம் என்பதாக ஒன்று இந்நாட்டில் இல்லவே இல்லை. எதைப் பொது இலட்சியமாகக் கருதினாலும், அது ஒரு வகுப்புக்கு நலனையும், மற்ற வகுப்புக்குக் கேட்டையும் கொடுக்கக் கூடியதாகவே வந்து முடிகிறது. ஒரு மனிதனை ஒரு மனிதன் பிறவி காரணமாகத் தொடக்கூடாது என்றால், மக்களிடையே அன்பும், ஒற்றுமையும் எப்படி வளரும்? பிறவி வெறுப்பும், பிறவி வேற்றுமையும் ஒவ்வொரு வகுப்புக்கும் தோன்றி, வேரூன்றி வளர்ந்த வண்ணமாக இருக்கிறது. ஒருவன் பிற மதத்தவனை மதிப்பதைவிட தன் மதத்தவனை இழிவாகவும் கேவலமாகவும், எதிரியாகவும், வஞ்சகனாகவும் மதிக்கின்றான்.

ஒரு மதத்தைச் சேர்ந்தவர்களுக்குள்ளாகவே ஒரு ஜாதி ஒரு ஜாதியைச் சுரண்டும்படியான ஏற்பாடுகள்

அநேகம் செய்யப்பட்டிருக்கின்றன. இதனால் ஒரு ஜாதி மேன்மையும், செல்வமும், நல்வாழ்வும் அடையவும், மற்ற ஜாதிகள் கீழ்மையும், தரித்திரமும், கஷ்ட வாழ்வும் அடையவுமான நிலைமை ஏற்பட்டு இருந்து வருகின்றது.

இந்தப் பேதங்களால் ஒற்றுமை இல்லை என்பது மாத்திரமல்லாமல் பொது இலட்சியம் இல்லாமல் இருப்பதோடு பொது முன்னேற்றம் என்பது வகுப்புத் துவேஷமாகக் கருதப்படுகிறது. இதன் காரணமாகவே இந்நாடு அநேக காலமாகத் தேக்கமடைந்திருப்பதோடு, கேடும் அடைந்து வருகிறது. ஆகவே, இந்த நாட்டு முன்னேற்றத் தடைக்கும், விடுதலைத் தடைக்கும் ஜனசமுதாய அமைப்பே முக்கிய காரணம் என்று சொல்லத்தக்க வண்ணம் இந்நாட்டு சமுதாயம் இருந்துவருகிறது.

## வாழ்க்கைத் திட்டம்

### மேல்நாட்டில் மக்களின் வாழ்க்கைத் திட்டம்

மேல்நாட்டு வாழ்க்கைத் திட்டமானது அனுபவத்தை ஒட்டியும், முன் யோசனைப்படியும் மக்கள் மனத்திருப்திக்கு அனுகூலமாகவும் அமைக்கப்பட்டிருக்கிறது. அதாவது மனிதன் வாழ்க்கையில் தினப்படி சாதாரணமாய் நேரிடும் சம்பவங்களையும், அசௌகரியங்களையும் கவனித்து அவைகளால் எந்த விதத்திலும் எதிர்பாராத அசௌகரியமோ, மனக்கசப்போ, தாட்சண்யமோ யாருக்கும் ஏற்படுவதற்கு இடமில்லாமல் கூடியவரை யோசித்து, தக்க திட்டங்கள் பழக்க வழக்கத்திலேயே புகுத்தப்பட்டிருக்கின்றன.

எவ்வளவு ஏழைக்குடும்பமானாலும் சாதாரண மனிதக் குடும்பமானாலும், உயர் குடும்பமானாலும் ஒருவர் வீட்டுக்கு ஒருவர் முன்னதாகச் சொல்லி அனுப்பாமல் வரமாட்டார்கள். அசௌகரியமான சமயத்தில் வரமாட்டார்கள். தாங்கள் போவதால் அந்த இடத்துக்கோ, வீட்டுக்கோ திடீரென்று எவ்வித அசௌகரியமும் ஏற்பட இடம்கொடுக்கமாட்டார்கள். தாட்சண்யத்துக்காக எவ்வித அசௌகரியமும் ஏற்பட சம்மதிக்கமாட்டார்கள். தன்னால், பிறருக்கு எவ்வித ஏமாற்றமோ, மனத்தாங்கலோ வரும்படி நடந்துகொள்ள மாட்டார்கள். அதாவது, ஒருவன் ஒரு காரியத்துக்காக ஒரு இடத்திற்குப் போகிறான் அல்லது காத்திருக்கிறான் என்று வைத்துக்கொண்டால் அந்தத்தாற் போல் அதுபோல் போகிறவன், முன் சென்றவனுக்குப் பின்னால்தான் நிற்பானே ஒழிய, அந்த இடத்துக்காரனுக்குத் தெரியும்படியாகக்கூட நிற்கமாட்டான் முன்னே போவதோ அவசரப்படுவதோ அநாகரிகமாகக் கருதப்படும். இரயிலில் டிக்கட் வாங்கப்போனால் முன்னால் இருப்பவனுக்குப் பின்னால், ஒருவன் முதுகை ஒருவர் பார்த்த வண்ணமாகவே நிற்பார்கள். ஆயிரம் போனாலும் அப்படியே ஒருவருக்கொருவர் பின்னால்தான் நிற்பார்கள் சாமான் வாங்கும் கடையானாலும் பாங்கி ஆனாலும், தபாலாபீசு ஆனாலும், நாடகம், வேடிக்கை பார்க்க டிக்கட் கொடுக்கும் இடமானாலும் அப்படியே தான் வந்த வரிசைக் கிரமப்படியே நிற்பார்கள்.

டிராம்வண்டி, பஸ், முதலியவை வரும் இடத்தில் நிற்பவர்கள், அந்த இடத்தில் வரிசையாக அடுக்கிவைக்கப்பட்டுள்ள நெ. (எண்) சீட்டை வந்தவுடன் எடுத்துக்கொண்டு நிற்பார்கள்., பஸ், கார் ஆகியவை வந்தவுடன் அந்த எண் வரிசைப்படிதான் அவற்றில் ஏறுவார்கள். ஒருவர்மீது ஒருவர் மோதமாட்டார்கள். ஏதாவது சாமான் விலை யோசிக்கும் போதும், நோட்டீசு பட்டுவாடா செய்யும்போதும், இடம்விட்டு நகரமாட்டார்கள்; கை நீட்டமாட்டார்கள். ஒருவருடன் ஒருவர் பேசிக்கொண்டிருக்கும்போது மத்தியில் யாரும் பேச ஆசைப்பட்டு, பேசுபவர்கள் கவனத்தைத் தங்கள் பக்கம் திருப்ப முயல மாட்டார்கள். எவ்வளவு அவசரமிருந்தாலும் அந்தச் சம்பாஷணை முடிந்தபின்தான் தாங்கள் பேச ஆரம்பிப்பார்கள். மிக்க அவசரமாய் இருந்தால், தங்களுக்கு முந்திய உரிமைக்காரனைக் கேட்டுக்கொண்டு அவன் சம்மதம்பெற்று அவனுக்கு நன்றிசெலுத்திவிட்டுத்தான் தாங்கள் முன் போகவோ பேசவோ ஆரம்பிப்பார்கள்.

எதிர்பாராத விருந்தாளியோ, போதிய சாவகாசம் கொடுக்காத விருந்தாளியோ, சிநேகிதனோ, பந்துவோ, தாய், தகப்பன், மகன், சகோதரர்களோ யாருமே எந்த வீட்டுக்கும் வரமாட்டார்கள். எவ்வளவு கஷ்டம் வந்தாலும், வாக்கு தவறவோ சொன்னபடி நடந்துகொள்வதைத் தவறவோ இசையவே மாட்டார்கள். குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்டதைச் செய்வார்கள்; குறிப்பிட்ட காலத்தில் வந்துவிடுவார்கள்; வந்த கிரமப்படி அமருவார்கள்.

இரயில்வே ஸ்டேஷன் முதலிய பொது இடங்களில் நிற்கும் கூலி ஆள், வண்டி வாகனக்காரர் முதலியவர்கள் வரிசையாகத்தான் அமர்த்தப்படுவார்கள்; தன் வரிசை வரும்வரை எவனும் பேசவோ, கூப்பிடவோ, முன்வரவோ மாட்டான். கூலி, வாடகை எல்லாம் முன்னமேயே ஏற்படுத்தப்பட்ட குறிப்பிட்ட விகிதமாகவே இருக்கும். அதிகம்-குறைவு என்கின்ற பேச்சே இருக்காது. கடைகளிலும் சாமான்களுக்கு விலை நிர்ணயிக்கப்பட்டு இருக்குமே ஒழிய வியாபாரம் பேச இடம் வைக்கமாட்டார்கள். சில சாமான்களுக்கும், சில காரியங்களுக்கும் முனிசிபாலிட்டியார் விலையும் விகிதமும் ஏற்படுத்திவிடுவார்கள். கூலி வண்டி அமர்த்திக்கொண்டபிறகுத் தகராறுக்கு இடமிருக்காது. எந்த விஷயத்திலும் தாட்சண்ய சங்கடமோ, தயவு குறைவோ ஏற்பட இடம் தரவே மாட்டார்கள். அப்படி இடம் தருவது எல்லாவற்றையும்விட அநாகரிகமாய் மதிக்கப்படும். பெண்கள், வயதான கிழவன்மார்கள், சிறுபாலர்கள் ஆகியவர்கள் விஷயத்தில் யாவரும் சலுகைகாட்டி முன் இடம் கொடுத்து சௌகரியம் செய்வார்கள்.

பெண்களிடத்தில், மனைவியானாலும் வேலைக்காரியானாலும் நயமாய் நடந்து கொள்வதைக் கொள்கையாய் அனுசரிப்பார்கள். ஒருவருக்கொருவர் மரியாதையாய்ப் பேசுவார்கள். ஒருவருக்கொருவர் உதவிசெய்ய ஆசைப்படுவார்கள்.

(தொடர்ச்சி 6-பக்கம்)

Edited, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilan Press 52, Cutchery street, ERODE.